Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register CC.257/2016
Sessions prosecution
depositions of witness for PW7 chief and cross

| | | |
|---|---|---|
| Time | : | 12.56 pm – 01.23 Pm |
| Name | : | திரு. சிவஞானம் |
| Father name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 16th day of April 2026.
(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )

**முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது மத்திகிரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திருமதி. விஜயா இறந்து விட்டதால் இவ்வழக்கில் நான் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 14.10.2008–ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் விஜயா அவர்கள் மத்திகிரி காவல் நிலையத்தில் பணியிலிருந்து நிலைய பொறுப்பில் இருந்த போது நாகேந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண். 258/2008, இ.த.ச பிரிவுகள் 381 –ன் கீழ் முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்தார். **அந்த முதல் தகவல்அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2) வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 15.10.2008-ம் தேதி காலை சுமார் 08.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சங்கரநாரயணன் மற்றும் நாகராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தார். **அந்த மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ-6 குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் ராஜேந்திரன், சுவாமி சாஸ்தா, அப்சல்நிசார் மற்றும் மகஜர் சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கின் எதிரியை 15.10.2008-ம் தேதி காலை 11.30 மணிக்கு மத்திகிரி டவுன் பஸ் நிலையத்தில் கைது செய்து விசாரிக்க அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பசீர் மற்றும் செல்லப்பாண்டி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 2-வது பக்கத்தில் எதிரி "என்னை அழைத்து சென்றால் திருடி விற்ற பொருட்களை வாங்கிய இடத்தை காட்டி விற்ற பொருட்களை வாங்கி தருகிறேன்" என்று கூறியுள்ளார். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3) ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியப்படி அதே நாள் 12.30 மணிக்கு AVR Enterprises ITI அருகில் உள்ள பழைய இரும்பு வாங்கும் இடத்தில் இருந்து பாக்கியராஜ் என்பவர் ஆஜர்ப்படுத்த சாட்சிகள் பசீர் மற்றும் செல்லப்பாண்டி முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் சுமார் 200 கிலோ பழைய இரும்புபொருட்களை கைப்பற்றினார் **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து தக்க வழிக்காவல் மூலம் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். இந்த இரும்பு பொருட்களை எதிரி ஒரு வாகனத்தில் ஏற்றி சென்றதாக புலன் விசாரணையிலும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் தெரிய வந்ததால் அதை தேடி வந்த நிலையில் 20.10.2008-ம் தேதி 09.00

மணிக்கு கௌமங்கலம் ஜங்சன் பிரிவு ரோடு அருகே KA 05 AD 0011 என்ற பதிவு எண் கொண்ட 407 டெம்போவை அதன் உரிமையாளர் அப்துல்நிசாத் என்பவரிடமிருந்து கைப்பற்றி சாட்சிகள் உமர் மற்றும்வெங்கடேஷ் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார்செய்தார். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ–9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சொத்தை படிவம் 91–ன் மூலம் கனம் நீதிமன்றத்தில ஒப்படைத்தார். **அந்த படிவம் அ.த.சா.ஆ.10 குறியீடு செய்யப்படுகிறது.** ஒப்புதல் வாக்குமூலம் சாட்சிகளையும், கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளையும் விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் திருடுபோன இரும்பு பொருட்களை வாங்கிய பாக்கியராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து புலன் விசாரணையை முடித்து இறுதியறிக்கையை தாக்கல் செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழககின் புகார்தாரர் சுந்தரம் பாஸ்ட்னர்ஸ் நிறுவனத்தில் Personal Manager–ஆக வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். புகார்தாரர் நிறுவனத்தின் உரிமையாளரையும் திருடு போன பொருட்களின் உரிமையாளரையும் விசாரிக்கவில்லை என்றாலும், உரிமையாளரிடமிருந்து எந்தவிதமான Authorization பெற்று இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். நான் சொன்னது போல் உதவி ஆய்வாளர் புலன் விசாரணை செய்யவில்லை என்றும், அவர் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும், இந்த வழக்கு சம்மந்தமாக எந்த ஆவணங்களையும் கைப்பற்றவில்லை என்றும், எதிரியை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றும், அவர் எந்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், அதன் அடிப்படையில் அவரிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும், கைப்பற்றப்பட்டதாக சொல்லும் மேற்படி பழைய இரும்பு பொருள்களுக்கும்

இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும், புகார்தாரர் நிறுவனம் பெரிய நிறுவனம் என்பதால் இந்த வழக்கை முடிப்பதற்காக எதிரி மீது தவறுதலாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் மேற்படி நிறுவனத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

ஒம்/திருமதி.V.பார்கவி.,B.A.,B.L.,L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்
விரைவு நீதிமன்றம்,
ஓசூர்.